செய்தி வெளியீடு எண்.857 நாள்.19.11.2009

**நியாயவிலைக் கடைகளின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் வீடுவீடாக சென்று பொது மக்களை சந்தித்து நியாயவிலைக் கடைகளில் ஆய்வு**

**கூட்டுறவு சார் பதிவாளர், விற்பனையாளர் தற்காலிகப் பணிநீக்கம் முறையற்ற வகையில் பணிபுரிந்த நபரை காவல்துறையிடம் ஒப்படைப்பு**

தமிழகத்தில் பெய்த பருவ மழைக்கு பிறகு அனைத்து அத்தியவாசியப் பொருட்களும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் முறையாக சரியான அளவில் வழங்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்ய மாண்புமிகு உணவு அமைச்சர் திரு எ.வ. வேலு அவர்கள் இன்று (18.11.2009) காலை 9.00 மணிக்கு சிறப்பு ஆய்வு குழுவினர்களுடனும் அரசு உயர் அலுவலர்களுடனும் சேலம் மாவட்டத்தில் உள்ள நியாயவிலைக் கடையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்கள்.

முதலில் சேலம் மாவட்டத்தில் சூரமங்கலம் கிராமம் – சோழம்பள்ளம், மேட்டூர் வட்டம் – ஓலைப்பட்டி, சிந்தாமணியூர், பாரப்பட்டி மற்றும் தொட்டிநாயக்கனூர் கிராமம் ஆகிய பகுதிகளில் வீடு வீடாக சென்று அங்கு வசிக்கும் பொது மக்களிடம் நியாயவிலைக் கடைகளின் மூலம் அவர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் எடை குறைவில்லாமலும், தரமாகவும் வழங்கப்படுகிறதா என்பதையும், அவர்களுடைய குடும்ப அட்டைகளை பெற்று அதில் வாங்கப்பட்டுள்ள பொருட்கள் தான் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும் கேட்டறிந்தார்கள். பாரப்பட்டியில் வசிக்கும் பொது மக்கள் நியாயவிலைக் கடையில் அதிக அளவில் குடும்ப அட்டைகள் உள்ளதால், அத்தியவசியப் பொருட்களை பெறுவதற்கு தாங்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது என்று தெரிவித்ததைத் தொடர்ந்து, பாரப்பட்டி, சீலக்காட்டூர், எம்.ஜி.ஆர். நகர் ஆகிய பகுதிகளை இணைத்து பாரப்பட்டியில் ஒரு முழு நேரக் கடை துவக்கிட ஆணையிட்டார்கள்.

சூரமங்கலம் வேளாண்மை கூட்டுறவு நியாயவிலைக் கடையில் மேற்கொண்ட ஆய்வின்போது, கடையில் கூட்டம் அதிகமாக இருப்பதால் பொருட்களை பெறுவதில் அதிக சிரமம் உள்ளதாக தெரிவித்த பொது மக்களின் கருத்தினை ஏற்று உடனடியாக அக்கடையை 2 கடைகளாக பிரிக்க ஆணையிட்டார்கள். அக்கடையில் அத்தியாவசியப் பொருட்களை முறையாக காட்சிப்படுத்தவில்லை என்பதை கண்டறிந்தார்கள். துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவைகளை கிடங்கிலிருந்து எடுத்து வந்து முறையாக பொது மக்களுக்கு விநியோகம் செய்யாததை கண்காணிக்கத் தவறிய கூட்டுறவு சார் பதிவாளர் திரு. குழந்தைவேலு என்பவரை தற்காலிகப் பணிநீக்கம் செய்ய ஆணையிட்டார்கள்.

தொடர்ந்து மேற்கொண்ட ஆய்வின்போது சோழம்பள்ளம் AB020 நியாயவிலைக் கடை மூடப்பட்டிருந்தது. பொது மக்களிடம் விசாரித்ததில் விற்பனையாளர் இரண்டு கடைகளை கவனித்து வருவதால் கடை திறக்கவில்லை என்று தெரிவித்தார்கள்.

அடுத்து சேலம் – சி.எம்.எஸ். AB 021, கன்னதி தெரு நியாயவிலைக் கடை, AB 022, நெடுஞ்சாலை நகர் நியாயவிலைக் கடை, AB 023 திருவாக்கவுண்டனூர் நியாயவிலைக் கடை, மேட்டூர் வட்டம், ஓலைப்பட்டி நியாயவிலைக் கடை, நல்லகவுண்டன்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு

வங்கியின் கீழ் EP 68 வாளதாசன்பட்டி நியாயவிலைக் கடை, எம்.என்.பட்டி நியாயவிலைக் கடை, மேச்சேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் EP 062 சாத்தாம்பாடி நியாயவிலைக் கடை, ஆகியவைகளில் ஆய்வுகள் மேற்கொண்டார்கள்.

AB021 கன்னதி நியாயவிலைக் கடையில் கூடியிருந்த பொது மக்கள் அனைவரும் அத்தியாவசியப் பொருட்கள் தங்களுக்கு முறையாக வழங்கப்படுவதில்லை என புகார் தெரிவித்தார்கள். அதன் பேரில் கடையில் 100 சதவீத தணிக்கை மேற்கொள்ள ஆணையிட்டார்கள். மேலும், 2 குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்ட 2 கிலோ துவரம் பருப்பை வாங்கி மீண்டும் எடை போட்டு பார்த்ததில், 1.760 கிலோ கிராம் தான் இருந்ததை கண்டறிந்தும், இக்கடை விற்பனையாளர் அனுமதி எதுவுமின்றி காலை 6.30 மணிக்கே கடையை திறந்து பொருட்களை விநியோகம் செய்ததை கண்டறிந்ததால், இக்கடையின் விற்பனையாளர் திருமதி ஆர். பாஞ்சாலி என்பவரை உடனடியாக தற்காலிகப் பணிநீக்கம் செய்யவும் ஆணையிட்டார்கள்.

AB022 நியாயவிலைக் கடையில் எவ்வித அனுமதியுமின்றியும், அத்துமீறி கடையில் எடை போடும் பணியில் ஈடுபட்டிருந்த திரு. எஸ். ரவி, த/பெ. பழனி என்பவரை காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு அவர் மீது குற்ற வழக்கு தொடரவும் ஆணையிட்டார்கள்.

நல்லகவுண்டன்பட்டி PACB EP 68 வாளதாசன்பட்டி நியாயவிலைக் கடையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த அரிசி மூட்டைகளில் தர சோதனை மேற்கொண்டு, நல்ல அரிசிதான் உள்ளது என்பதை கண்டறிந்தார்கள்.

மேலும், தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் சாத்தாம்பாடி சாலையில் மண்வெட்டி கொண்டு வேலை செய்து கொண்டிருந்த சாத்தாம்பாடி கிராமத்தைச் சேர்ந்த பெண்களிடம் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் விசாரித்ததில், நியாயவிலைக் கடையின் மூலம் அவர்கள் தரமான பொருட்கள், எடை குறைவில்லாமல், முறையாக பெற்று வருவதாக தெரிவித்தார்கள்.

அடுத்து ஓமலூர் வட்ட வழங்கல் அலுவலகத்தில் ஆய்வுகள் மேற்கொண்டு, புதிய குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பிப்பவர்களின் மனுக்களின் மீது உடனடியாக விசாரணை மேற்கொண்டு காலதாமதமின்றி புதிய குடும்ப அட்டை வழங்க அறிவுறுத்தினார்கள். மேலும், வட்ட வழங்கல் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் ‘அ’ பதிவேட்டினை ஆய்வு செய்து திருப்தி தெரிவித்தார்கள்.

ஆங்காங்கே பொதுமக்கள் தெரிவித்த புகார்களையும், உணவு அமைச்சர் அலுவலகத்தில் பெறப்பட்ட புகார்களையும் விசாரணை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆணையிட்டார்கள். நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் சேவையில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் உடனடியாக சேலம் மாவட்ட வழங்கல் அலுவலருக்கு 9445000222 என்ற செல் பேசியிலும், சேலம் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 0427–2330030 என்ற தொலைபேசியிலும் புகார்களை தெரிவிக்கும்படி பொது மக்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். மேலும் பொதுமக்களின் குறைகளை 044–28592828 என்ற தொலை பேசி எண்ணுக்கு தெரிவித்தால் உடனடியாக தீர்வு செய்யப்படும் என்று தெரிவித்தார்கள்.

நியாயவிலைக் கடைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வினை தொடர்ந்து மாலை 3.00 மணிக்கு சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் உணவுப் பொருள் வழங்கல் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றில் பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்தும் அலுவலர்களின் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்களும் பங்கு பெற்றார்கள்.

ஆய்வு கூட்டத்தை தொடங்கி வைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில் வட்ட வழங்கல் அலுவலர்கள் காலையில் முன்னதாகவே அலுவலகம் வந்து அலுவலகத்திற்கு வந்துள்ள பொது மக்களுக்கு உரிய தகவல்கள் அளிக்க வேண்டும் என்றும், நியாயவிலைக் கடைகள் உரிய நேரத்தில் திறக்கப்படுகிறதா என்பதையும் அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் போதிய அளவு இருப்பு உள்ளதா, நல்ல தரமான பொருட்களையே விற்பனையாளர் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குகிறார்களா என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அந்தியோதயா அன்ன யோஜனா திட்டத்தின் கீழ் வறியவரில் மிகவும் வறியவராக இருப்பவர்களை பயனாளிகளாக சேர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். பொது மக்கள் கடைகளில் வரிசையில் நின்று பொருட்களை பெறுவதில் தாமதம் ஏற்படுவதை தவிர்க்க 1600 குடும்ப அட்டைகளுக்கு மேலுள்ள கடைகளை இரண்டாக பிரிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், ஒவ்வொரு பொருளையும் பெற ஒவ்வொரு நாள் வர வேண்டும் என்பது ஏற்கக்கூடியதல்ல. ஆகையால் அனைத்துப் பொருட்களையும், அனைத்து நாட்களிலும் வழங்க வேண்டும். மேலும், விற்பனையாளர் பதவிகளிலுள்ள காலிப் பணியிடங்களை 10 தினங்களுக்குள் இணைப்பதிவாளர் நிரப்ப வேண்டும்

சேலம் மாவட்டத்தில் நியாயவிலைக் கடைகளில் முறைகேடு புரிந்த பணியாளர்கள் மீது குற்ற வழங்கு தொடரப்பட்டு, துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தவறுகள் செய்யும் பணியாளர்களுக்கு தாமதமின்றி கடுந்தண்டனை வழங்கப்பட வேண்டும். தற்போது மழைக் காலமாக இருப்பதால் நியாயவிலைக் கடைகளிலும், கிடங்குகளிலும் தேவையான அளவில் இருப்பு வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், கிடங்குகளில் இருந்து நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்பப்படும் அரிசி தரமானதாக இருக்கவேண்டும் அவ்வாறு இல்லையென்றால் அந்த அரிசியை மாற்றி வழங்க வேண்டும் என்றும் போலி குடும்ப அட்டைகளை கண்டுப்பிடித்து ரத்து செய்யப்பட்ட பின் அதனை வட்ட வழங்கல் அலுவலகத்தில் பராமரித்திடும் “அ” பதிவேட்டிலும் ரத்து செய்யப்பட்டுள்ளதா என்பதை கண்டிப்பாக ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

நியாயவிலைக் கடை பணியாளர்கள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள், கடமைகள், பொறுப்புகள், அங்காடி பராமரிப்பு, மாதிரிகள் காட்சிப் படுத்துதல், அறிவிப்பு பலகைகள் பராமரிப்பு, பதிவேடுகள் பராமரிப்பு, “அ” பதிவேடு பராமரித்தல், பொருள் தேவை கணக்கிடுதல், சரியான எடையில் வழங்குதல், தரமான பொருட்களை வழங்குதல், அறிக்கை அனுப்புதல் குறித்து விரிவான நியாயவிலை அங்காடி கையேடு தயார் செய்யப்பட்டு ஒவ்வொரு நியாயவிலைக் கடைக்கும் அனுப்பப்பட்டுள்ளது. நியாயவிலைக் கடை பணியாளர்களு;கடு இந்த கையேட்டின்படி 3 மாதங்களுக்கு ஒரு முறை மண்டல இணைப்பதிவாளரால் வட்ட வாரியாக பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

சிறப்புப் பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பொருட்கள் தேவைக்கேற்ப இருப்பு வைக்கப்பட வேண்டும். மாதாமாதம் மக்கள் குறைதீர்க்கும் நாளில் பெறப்படும் மனுக்கள் மீது உடனுக்குடன் தீர்வு செய்ய வேண்டும் என்றும் ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் தொடக்க உரையைத் தொடர்ந்து மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் பொது விநியோகத் திட்டடம் மிகவும் திறம்பட செயல்படுத்தப் படுவதாகவும் இத்திட்டத்தினை மேலும் சிறப்பாக செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்களஎ. அதன் பிறகு மாவட்ட வழங்கல் அலுவலர், மண்டல இணைப்பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் ஆகியோர்களின் செயல்பாட்டினை தனித்தனியாக ஆய்வு செய்து அறிவுரை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., முதன்மை செயலாளர், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, திரு. க. ராஜாராமன், இ.ஆ.ப., ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. டோக்ரா, இ.கா.ப., கூடுதல் காவல் துறை தலைலர், திரு.ஜெ. சந்திரகுமார், இ.ஆ.ப., சேலம் மாவட்ட ஆட்சியர், திரு. சித்திரசேனன், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9